செ.வெ.எண்: 40 நாள்: 15.03.2017

# பத்திரிகைச்செய்தி

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான (ஆண் /பெண் இருபாலர்) வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுதல்

புதுக்கோட்டை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு TNSRLM, புதுவாழ்வுத் திட்டம் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் வாயிலாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் 18 முதல் 35 வயது வரையிலும் மற்றும் மாற்றுத்திறனாளிகளாயிருப்பின் 18 முதல் 45 வயது வரை உள்ள (ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும்) தனியார் தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு வழங்கிட இரண்டாம் கட்டமாக **அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி மற்றும் கறம்பக்குடி** ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் **ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஆவுடையார்கோவில் 17.03.2017** அன்று வேலை வாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதால், தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கல்விச்சான்றிதழ், உரிய மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், ஆதார் அட்டை, குடும்பஅட்டை (Ration Card) மற்றும் மாற்றுத்திறனாளியாக இருப்பின் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, தொழிற்பயிற்சி தொடர்பான சான்றிதழ்களுடன் கலந்துகொள்ளவும் மேலும் இம்முகாமில் தனியார் தொழில் நிறுவனங்களும் பங்கு பெற்று தகுதியானவர்களை வேலைக்கு தேர்வு செய்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட நான்கு ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் பங்கு பெற்று பயனடையலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**